*International Journal of Linguistics and Computational Applications (IJLCA)* ISSN 2394-6385 (Print)
*Volume 8, Issue 1, January – March 2021* ISSN 2394-6393 (Online)

# தமிழில் புராண இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

சி.ஜெயமுருகன்
*முனைவர்பட்ட ஆய்வாளர்,, தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலம்,*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113*

**முன்னுரை** — புராணச் செய்திகள் உவமையாகவும் குறிப்பாகவும் சங்க இலக்கியங்களில் பயின்றுள்ளன. ஆனால் இடைக்கால இலக்கியங்களில் புராணக் கதைக்கூறுகள் மிகுதியாக உள்ளன. இக்கால மக்கள் சமயத்துறையில் பொழுதும் ஈடுபாடுடையவர்களாகக் காணப்பட்டனர். அதன் விளைவின் ஒரு பகுதிதான் புராண இலக்கியம். சமயத்தை வலியுறுத்திப் பாடுதலே இவர்கள் புராணம் எழுதிய நோக்கம் ஆகும். சங்க இலக்கியங்களில் முதன்முதலில் தோன்றிய எட்டுத்தொகை நூல்களின் பாடல்கள் தனித் தனிப்பாடல்களாக விளங்கின. பின்பு தோன்றிய பத்துப்பாட்டு தொடர்நிலைச் செய்யுள்களாகத் தொகுக்கப்பட்டது. இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி பெற்றதற்குப் பின்னர் உரைப்போம் உள்ளக்கருத்து அளவுக்குச் செய்யுள் நீட்சி பெற்றிருப்பது அறியமுடிகிறது.

**முக்கியவார்தைகள்** — புராணம்; பேரரசர்கள்; புலவர்; சிற்றரசர்; பதினெண் கீழ்க்கணக்கு

## 1. புராண எழுச்சிக்கான சூழல்

‘பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பகுதி நீதி நூல்களாக அமையக் காணலாம். அக்காலச் சமுதாயச் சூழல்களுக்கு ஏற்ப மக்களுக்குப் பொதுநீதிகளை உணர்த்த வேண்டிய சமுதாயத் தேவையினை இவ்விலக்கியங்கள் நிறைவு செய்தன. சங்க காலத்தில் புகுந்துவிட்ட ஆகிய மரபுகளும், புராணக் கதைகளும் அவ்விலக்கியங்கள் வெளியிட்ட நீதிக்கருத்துகளும் ஒருங்கிணைந்து இலக்கிய வடிவம் பெறத் தொடங்கின. அவ்வடிவம் புராணம் என்ற பெயரினைப் பெற்றது. புலவர்கள் வாழ்வியலைப் பாடவேண்டும் என்ற சங்ககால மனநிலை இங்கு இல்லை. நீதியைப் புகட்ட வேண்டும் என்ற சூழலும் மாறியது. பெருங்காவிய மோகம் நிலவியது. இச்சூழலில் புலவர்கள் தாங்கள் பிறப்பெடுத்ததன் நோக்கம் இறைவனைப் பாடுதலும், அவன் அடியவரைப் போற்றுதலும் என்கிற நிலை ஏற்பட்டபோது புராணங்கள் பிறப்பெடுத்தன. இவற்றின் அடிப்படையில் புராணத்தின் இலக்கியக்கொள்கை அமைந்தது.” பேரரசர்கள் தமிழ்நிலத்தை ஆண்ட நிலை மாறிச் சிற்றரசர்களின் கையில் நாடு சிக்கியது. புலவர்களைப் போற்றும் மதுகையுடையோர் குறைந்தனர். காப்பியக் கூறுகள் அமையக் கடவுளர் செயல்களைப் புராணங்களாகப் படைப்பதன் மூலம் புலவர்கள் வாழ்வில் அமைதியைத் தேட முனைந்தனர். காப்பியக் கூறுகள் அமையப் புராணங்களைப் படைப்பதைப் புராணக் கொள்கைகளில் அறியமுடிகிறது.

## 2. தமிழில் புராணப் பாகுபாடு

தமிழில் புராணங்கள் என்ற நிலையில் பல பெருநூல்களும் சிறுநூல்களும் காணப்படுகின்றன. இப்புராண நூல்கள் கூறும் பொருளையும் இவற்றின் அமைப்பையும் கொண்டு இவை பாகுபாடு செய்யப்படுகின்றன. பொதுவாக இவற்றைப் பின்வரும் ஆறுநிலைகளில் பகுக்கலாம். அவை,

- மகாபுராணங்கள்
- இதிகாச அமைப்பில் உள்ள புராணங்கள்
- சிவபுண்ணியம் சிவ தருமம் கூறுவன
- ஆண்டவன் அடியார் வரலாறும் பிற வரலாறுகளும் கூறுவன

IRP Group of Journals



DOI: **10.30726/ijlca/v8.i1.2020.81002**

- சாதிப் பெருமை விளக்குவன
- ஊர்ச்சிறப்பை எடுத்துரைப்பவை

போன்றவையாகும். தமிழிலுள்ள அனைத்துப் புராண நூல்களையும் இப்பாகுபாட்டில் அமைக்கலாம்.

### 3. மகாபுராணங்கள்

வடமொழியிலுள்ள மகாபுராணங்களான பதினெண் புராணங்களை அப்படியே முழுமையாகத் தழுவியோ மொழிபெயர்த்தோ எழுதப்பட்டவை மகாபுராணங்கள் என்பர். கூர்ம புராணம், இலிங்க புராணம், மச்ச புராணம், பாகவதம் போன்றவை தமிழ் மகாபுராணங்கள் என்னும் நிலையிலுள்ளவை. சைவ மகாபுராணம் வைணவ மகாபுராணம் என இரண்டும் சென்ற நூற்றாண்டில் உரைநடையாக மொழிபெயர்க்கப் பெற்றவையாகும்.

### 4. இதிகாச அமைப்பில் உள்ள புராணங்கள்

காப்பிய அமைப்போடு ஒரு குறிப்பிட்ட கடவுளின் வரலாற்றைக் கூறுவன இப்புராணங்களாகும். மகாபுராணத்தின் ஒரு பகுதியாகவும் இவ்வகைப் புராணங்கள் அமையும். கந்தபுராணம், விநாயக புராணம், பாகவதம் போன்றவை இதிகாச அமைப்பில் உள்ள புராணங்களாகும்.

### 5. சிவபுண்ணியம் சிவதருமம் கூறுவன

மகா புராணங்களின் ஒரு பகுதியாக இவ்வகை நூல்கள் அமைந்துள்ளன. உபதேசகாண்டம், பிரமோத்தர காண்டம், வாயு சங்கிதை, காசிக் காண்டம், சிவ தருமோத்தரம் என்பன இவ்வகையில் சேர்ந்தவைகளாகும். இவை யாவும் வடமொழி மகாபுராணங்களின் ஒரு பகுதி என்பதைக் காட்டவே சங்கிதை காண்டம், காண்டம் என்ற வடமொழிச் சொற்கள் இடம்பெற்றிருக்கும். இவை யாவும் மொழிபெயர்ப்பு நூல்களேயாகும்.

### 6. ஆண்டவன் அடியார் வரலாறும் பிறர் வரலாறுகளும்

சைவ வைணவ அடியார்கள் வரலாற்றை விரித்துக்கூறும் புராணங்கள் இவ்வகையில் அமைந்தவையாகும். தமிழில் இறையடியார்களை இறைவனாகவே கருதி வழிபடுவது ஒரு மரபாகும். சைவத்திலும் வைணவத்திலும் இது ஒரு சமயத் தத்துவமாகவே பின்பற்றப்படுகின்றது. இறையடியார்கள் வரலாற்றைப் புராணமாகப் பாடுவது சிறந்த இலக்கிய மரபாகவும் அமைகின்றது. பெரிய புராணம், சேக்கிழார் புராணம், திருவாதவூர் அடிகள் புராணம் போன்ற சைவ சமய நூல்கள் இவ்வகையைச் சேர்ந்தவைகளாகும். இவ்வாறே வைணவத்திலும் அரிசமய தீபம், குருபரம்பராப் பிரபாவம், திவ்விய சூரிசரிதம் போன்ற நூல்கள் இறையடியார்கள் பற்றிக் கூறும் வரலாறுகளாக அமைந்துள்ளன.

இவ்வகைப் புராணங்கள் யாவும் தமிழில் புதிதாகப் படைக்கப்பட்ட முதல் நூல்கள் ஆகும். இவை மொழிபெயர்ப்பு நூல்களாக அமையாததும் குறிப்பிடத்தக்கதாகும். பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தைத் தொடர்ந்து எழுந்த இவ்வகையான அடியார் வரலாறு கூறும் நூல்கள் போலவே பல நூல்கள் பின்னர்த் தோன்றியுள்ளன.

### 7. சாதிப்பெருமை விளக்குவன

தமிழகத்திலுள்ள பல்வேறு சாதிகளை உயர்த்திப்பாடும் நூல்கள் பதினேழாம் நூற்றாண்டு முதலாகவே தமிழில் தோன்றியுள்ளன. வைசியப்பள்ளு, செங்குந்தர் பிள்ளைத் தமிழ் எனப் பல சிற்றிலக்கியங்கள் இவ்வாறு தோன்றியவை. இவ்வகையில் சாதிப் பெருமைகளை விளக்கும் பல புராண நூல்களும் தமிழில் எழுந்துள்ளன. செங்குந்தர்


DOI: 10.30726/ijlca/v8.i1.2020.81002

புராணம், விசுவகர்மர் புராணம், சீர்கருணர் புராணம், குலாளர் புராணம் என்பனவாகும்.

### 8. ஊர்ச்சிறப்பை எடுத்துரைப்பவை

'ஒரு தலத்திலுள்ள இறைவன் புகழை விரித்துச் சொல்வது தல புராணம் ஆகும். ஊர்ப்பெயரில் அமைந்த இவ்வகைப் புராண நூல்கள் அவ்வத் தலத்தின் பெருமையையும், மூர்த்தியின் பெருமையையும் தீர்த்தத்தின் பெருமையையும் கூறி இத்தல இறைவனைப் பூசித்து நற்பேறு பெற்றவர்களின் வரலாற்றை எடுத்துரைப்பன. மக்கள் ஒழுகத்தக்க சீரிய ஒழுக்கங்களை எடுத்துக்கூறி விலக்கத்தக்க தீய செயல்களை விளக்குவதும் இவற்றைக் காப்பிய நயம்பட உரைப்பதும் இந்நூல்களின் சிறப்பாகும். ஒவ்வொரு ஊர் மக்களும் தங்கள் ஊர் பற்றியும் நாடு பற்றியும் பெருமை கொண்டு சிறந்த சமயப்பற்றும் நாட்டுப்பற்றும் கொண்டு தன்னம்பிக்கையோடு வாழ வழி செய்வனவே இத்தல புராணங்கள்"[1] என்பதை இங்கு தெளிந்து கொள்ளுதல் வேண்டும்.

### 9. புராண இலக்கிய வளர்ச்சி

'முதன்முதலில் தமிழில் புராணம் என்று அறியக் கிடைப்பன புராணசாகரமும், சாந்திபுராணமும் ஆகும். புராணசாகரம் பஃறொடை வெண்பாவினால் ஆனது. சாந்தி புராணம் என்பது சாந்தி நாதன் என்ற பதினாறாவது சைன தீர்த்தங்கரர் வரலாற்றைக் கூறும் புராணமாகும். கி.பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளைச் சார்ந்தனவாகக் கருதப்படும் இவ்விரு புராண நூல்களும் இன்று வழக்கில் இல்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்த பெரியபுராணம் அடியவர்களின் வரலாற்றைப் பாடும் பெருங்காப்பியமாக அமைந்துள்ளது. சமயப் பெரியோர்களைப் புராணமாகப் பாடும் மரபு சைவர்களின் மரபு ஆகும். அம்மரபில் சைவ அடியவர்களைப் புராணமாகச் சேக்கிழார் பாடினார். அதுவே பெயரிலும் பொருளிலும் பெரிய புராணமாகத் திகழ்கின்றது. இப்புராணத்தினால் தமிழகச் சமயச் சான்றோர்கள் சாகாவரம் பெற்றுத் தமிழ் மண்ணில் உலாவுகின்றனர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் மதுரைத் தலத்திற்குத் திருவால வாயுடையர் திருவிளையாடல் என்ற புராணத்தைப் பெரும்பற்றப்புலியூர் நம்பி பாடினார். இதுவே கிடைத்திருக்கின்ற தலபுராணங்களில் முதலாவதாகக் கருதப்பெறுகின்றது. பதினான்காம் நூற்றாண்டில் குருபரம்பரைப்பிரபாவம் என்ற வைணவ நூல் பின்பழகிய பெருமாள் ஜீயரால் இயற்றப்பெற்றது. நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைத் தொகுத்த வரலாற்றினை உமாபதிசிவம் திருமுறைகண்ட புராணம் என்ற புராணமாக வடித்தார். மேலும் திருத்தொண்டர் புராணம் பாடப்பெற்ற வரலாற்றினைச் சேக்கிழார் புராணம் என்ற பெயரில் பாடினார். இந்நூற்றாண்டிலேயே மேரு மந்திர புராணம் என்ற புராணத்தை வாமன முனிவர் இயற்றினார். இது 'மேரு, மந்திரர்" என்ற இரு சைனப் பெரியார் வரலாற்றைக் கூறும் புராணமாகும். இந்நூற்றாண்டில் எழுந்து இன்றளவும் மக்கள் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றுத் திகழ்வது கந்தபுராணம் என்னும் புராணமாகும். இப்புராணம் ஆறு பெரும் பிரிவுகளான காண்டங்களைக் கொண்டது. மொத்தம் 10,345 திருவிருத்தங்களைக் கொண்டுள்ளது. இப்புராணம் முருகனின் வரலாற்றைப் பேசும் பெருங்காப்பியமாகும். இந்நூலினை இயற்றியவர் கச்சியப்ப சிவாச்சாரியார் என்பவராவார்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வடமொழியில் இருந்து தழுவி எழுதப்பெற்ற புராணங்களே அதிகமாகத் தோன்றின. வரகுணராமபாண்டியர், இலிங்க புராணம், வாயு சங்கிதை ஆகியவற்றை வடமொழியினின்றும் தமிழில் பாடினார். மேலும் இவர் பிரமோத்திர காண்டத்தினையும் மொழிபெயர்த்தார். அதிவீரராம பாண்டியர் காசிக்காண்டம், கூர்மபுராணம்


DOI: **10.30726/ijlca/v8.i1.2020.81002**

ஆகிய புராணங்களை வடமொழியினின்றும் தழுவிப் பாடினார். பதினேழாம் நூற்றாண்டில் அரிசமயதீபம் என்ற புராணநூல் எழுதப்பெற்றது. இந்நூற்றாண்டில் செங்குந்தர் புராணம், விசுவகர்மா புராணம், வீரநாராயணசாமி விஜயம் என்ற புராண நூல்களும் எழுந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில் குருபரம்பரையை நம்பிதாசர் பாடினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் முருகதாசரின் புலவர் புராணம் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சாதிப் பெருமையினைப் பாடும் புராணங்களும் தோன்றின. இருபதாம் நூற்றாண்டில் அசலாம்பிகை அம்மையார் எழுதிய காந்திபுராணம், திலகர் புராணம் போன்ற நூல்கள் குறிக்கத் தக்கனவாகும்."[2] இப்புராணங்களைப் போன்று மேலும் பல புராணங்கள் தோற்றம் பெற்று பராண இலக்கியத்திற்கு பெரும்பங்காற்றின.

## 10. முடிவுரை

புராண எழுச்சிக்கான சூழல் நிலைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. தமிழில் புராணப் பாகுபாடு முறையினையும் எடுத்து விளக்கியுள்ளனர். புராண இலக்கிய வளர்ச்சியில் ஒவ்வொரு நூற்றாண்டு அடிப்படையில் வந்துள்ள புராண நூல்களை தொகுத்து கூறப்பட்டுள்ளது. தமிழ் புராண இலக்கியத்தில் உள்ள செய்திகள், எடுத்துகாட்டாக இக்கட்டுரை அமைகிறது.

## மேற்கோள் நூல்கள்

[1] டாக்டர் வே.இரா.மாதவன், தமிழில் தலபுராணங்கள், பக்.25-27.
[2] முனைவர் அரு.மருததுரை புராண இலக்கிய வரலாறு, பக்.104-107.


DOI: **10.30726/ijlca/v8.i1.2020.81002**